டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.01.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 172 - Madurai | Online Edition

## பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் விவசாயத்திற்கான உயிரி உற்பத்தி என்ற கருப்பொருளில் 5வது இணையவழி கருத்தரங்கு நடைபெற்றது

புது தில்லி, ஜன.13

மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத்துறை, தனது உயிரி


## அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்







### அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

### விடுமுறை அறிவிப்பு

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 14.1.25 மற்றும் 15.1.25 ஆகிய இரண்டு நாட்கள் விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 17.1.25 வெள்ளிக்கிழமை வெளிவரும்.

\- நிர்வாகி

தொழில், உயிரி உற்பத்தி முன்முயற்சி குறித்த தொடரில் ஐந்தாவது இணைய வழி கருத்தரங்கை ஜனவரி 13ல் நடத்தியது. இந்த இணையவழி அமர்வானது பயோ இ3 கொள்கையின் கீழ் முக்கிய களமான 'பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் விவசாயத்திற்கான உயிரி உற்பத்தி' என்பதில் கவனம் செலுத்தியது. ஆகஸ்ட் 2024-ல் மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட பயோ இ3 கொள்கை, உயிரி அடிப்படையிலான கண்டுபிடிப்புகளில் இந்தியாவை உலகளாவிய தலைமையிடத்தில் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது. பயோ இ3 என்பது பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான உயிரி தொழில்நுட்பம் ஆகும்.

கல்வியாளர்கள், தொழில்துறை தலைவர்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நிலையான, மீளுருவாக்கம் செய்யும் விவசாயத்தில் முன்னேற்றங்கள் மற்றும் வாய்ப்புகளைப் பற்றி விவாதிக்கும் தளத்தை இந்த கருத்தரங்கு வழங்கியது. நிலையான விளைச்சல் கிடைக்கவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் தரத்தை மேம்படுத்தவும், நமது எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உணவை உறுதி செய்யவும், விவசாயத்தில் பருவநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் வழிமுறைகளுக்கான அதிகரித்து வரும் முக்கியத் துவத்தை இந்த விவாதங்கள் எடுத்துரைத்தன. உற்பத்தி, பதப்படுத்துதல், நுகர்வு, கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொடங்கி முழு மதிப்புகூட்டல் சங்கிலித் தொடரும் விளைபொருள் வீணாவதைத் தடுப்பதற்கும் அதிகபட்ச செயல்திறனைப் பெறுவதற்கும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

பல்வேறு துறைகளில் உள்ள முக்கியமான சவால்களுக்கு உயிரியல் தொழில்நுட்ப தலைமையிலான தீர்வுகள் நாட்டை ஒரு முன்னோடியாக நிலைநிறுத்துவதுடன், சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும். அதே வேளையில், நிலையான எதிர்காலம், இலாபகரமான பொருளாதார சூழலை நோக்கி நாட்டை வழிநடத்திச் செல்லும் என்று உயிரி தொழில்நுட்பத் துறையின் விஞ்ஞானி டாக்டர் வைஷாலி பஞ்சாபி கூறினார்.

உயிரி தொழில்நுட்பத் துறையின் விஞ்ஞானி டாக்டர் சுமிதா குமாரி, நாட்டில் வேளாண் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் உயிரி உற்பத்தியின் பயன்பாடுகள் மற்றும் சாத்தியக் கூறுகள் பற்றி எடுத்துரைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு விருது

கோயம்புத்தூர், ஜன.13

அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் சிறந்த மைய விருது (முதல் இடம்) கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உணவு பதன் செய் பொறியியல் துறை பெற்று உள்ளது. 2024-2025 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்திற்காக கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை இந்த விருதைப் பெற்றுள்ளது. இவ்விருது ஜோர்ஹாட்டில் உள்ள அசாம் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் 40வது வருடாந்திர ஆய்வுக்கூடத்தில் வழங்கப்பட்டது.



புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இணை பொது இயக்குனர் (வேளாண் பொறியியல்), முனைவர் எஸ் என் ஜா, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவுப் பதன்செய் பொறியியல் துறையின் துறைத் தலைவர் மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி, முனைவர் மு பாலகிருஷ்ணனுக்கு அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக இந்த விருதை, ஜோர்காட்டில் உள்ள அஸ்ஸாம் வேளாண் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், முனைவர் பித்யுத் சி தேகா, உதவி பொது இயக்குனர் (பதன்செய் பொறியியல்), முனைவர் கே. நரசையா, லூதியானாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் - மத்திய அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர், முனைவர் நச்சிகேத் கோட்வாலிவாலே மற்றும் அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் ஆர் விஸ்வகர்மா ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி, ஆராய்ச்சி இயக்குனர், முனைவர் எம் ரவீந்திரன் மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர், முனைவர் ஏ ரவிராஜ் ஆகியோர் உணவு பதன்செய் பொறியியல் துறையின் அர்ப்பணிப்பு, செயல்திறன், மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைப் பாராட்டினர்.

## விவசாய மேம்பாட்டுக்கு

## எஸ்.ஆர்.எம் வேளாண் கல்லூரியின் பயிற்சி நிகழ்ச்சி



செங்கல்பட்டு, ஜன.13

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பாக்கம் ஊராட்சியில் எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியின் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி வழங்கல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மண்புழு உரம் தயாரிப்பு, சாண ஏரிவாயு உற்பத்தி, பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறை, விதை நேர்த்தி மற்றும் திருந்திய நெல் சாகுபடி போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவி பேராசிரியர்களின் வழிகாட்டுதலுடன், இளங்கலை 4 ஆம் ஆண்டு மாணவிகள் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். ஊராட்சி மன்ற தலைவர் அமுல் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்புழு வளர்ப்பு குறித்து முனைவர் தினேஷ், சாண ஏரிவாயு உற்பத்தி குறித்து முனைவர் கணேசமூர்த்தி, திருந்திய நெல் சாகுபடி குறித்து முனைவர் அர்ச்சனா, விதை நேர்த்தி குறித்து முனைவர் அம்பிகா, பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறை குறித்து முனைவர் தீபிகா ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களின் சந்தேகங்களை கேட்டறிந்தனர். இதன் மூலம் நிகழ்ச்சி மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது.

# அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விவரம் 13.01.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 32 | 38 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 48 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 40 | 44 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 65 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 85 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 60 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 50 | 60 |
| 7 | பீர்க்கன் | 50 | 56 | 63 | டர்னிப் | 50 | 60 |
| 8 | சுரைக்காய் | 22 | 26 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | | | |
| 10 | கொத்தவரை | 44 | 50 | 66 | காளிபிளவர் | 35 | 40 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 60 | 70 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 44 | 69 | இஞ்சி | 40 | 46 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 44 | 50 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 74 | 80 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 76 |
| 16 | பெ.வெங்காயம் | 33 | 37 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 46 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 80 | 86 | 74 | | | |
| 19 | முருங்கை | 110 | 140 | 71A | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 100 | 105 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 44 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 36 |
| 28 | கறிவேப்பிலை | 74 | 78 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 9 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 50 | 60 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 38 | 42 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 34 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | 103 | Seedless திராட்சை(ப/க) | 140 | 160 |
| 53 | ஸ்வீட் கார்ன் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | விளாம்பழம் | 70 | 80 |
| 55A | துவரை | 60 | 66 | | அத்திப்பழம் | 160 | 170 |
| 55B | மஞ்சள் கொத்து | 10 | 30 | | வாட்டர் ஆப்பிள் | 80 | 90 |

# சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் பொங்கல் விழா கொண்டாட்டம்



திருச்சி, ஜன.13

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலை யத்தில் அதிக மகசூல் தரும், முன் வறட்சி, நீர்த்தேக்கம், காரத்தன்மை செவ்வழுகல், கரிப்பூட்டை போன்றறே நாய்கள், தண்டுத் துளைப் பான் போன்ற பூச்சித் தாக்குதல்ஆகியவற்றைத் தாங்கி வளரக் கூடிய ரகங்களை கண்டு அறிதல்,மண்வளப் பாதுகாப்புடன் கூடிய ஒருங்கிணைந்த, ஊட்டச்சத்து மேலாண்மையை கண்டறிதல் போன்ற பணிகளை சிறப்பாகக் செய்து வருகிறது. மேலும் மக்களுக்கு பயன் தரும் வகையில் பல்வேறு நெல் ரகங்களில் விதை உற்பத்தி செய்வது போன்ற பல பணிகளை செய்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் க.சுப்ரமணியன் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வ மாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் நன்றி சொல்லும் விழாவாக பொங்கல் பண்டிகை கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் மிகசிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த பொங்கல் விழாவில் கரும்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், அலுவலர்கள் மற்றும் பண்ணை தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த பொங்கல் விழாவிற்கு கரும்பு ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.ராஜாபாபு தலைமையேற்று தமிழர்களின் பாரம் பரியம் பற்றி பண்ணை தொழிலாளர்களுக்கும் அலுவலர் களுக்கும் எடுத்துரைத்தார். பின்னர் நிகழ்ச்சியில் புது பானையில் புது அரிசியில் பொங்கல் இட்டு மாடுகளுக்கு பூஜை செய்து, இயற்கைக்கு நன்றி தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து அலுவலர்கள் மற்றும் பண்ணை தொழிலாளர் களுக்கு பல்வேறு விதமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் விபரம்**

போட்டிகள் வாரியாக, ஸ்லோ சைக்கிள் பந்தயம் – மாசிலாமணி, (முதல் பரிசு), சுப்பிரமணி (இரண்டாம் பரிசு), லக்கி கார்னர் (பெண்கள்) ஜெயா (முதல் பரிசு), ஐஸ்வர்யா லட்சுமி (இரண்டாம் பரிசு), லக்கி கார்னர் (ஆண்கள்) பி.ரவி (முதல் பரிசு), கே.ரவி (இரண்டாம் பரிசு) ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப் பட்டன. இந்த பொங்கல் விழாவில் சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் மாசிலாமணி மற்றும் முனைவர் அன்பானந்தம் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் புத்தாடை, பச்சரிசி, கரும்பு, மஞ்சள், அறுசுவை உணவு வழங்கி பொங்கல் வாழ்த்தை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானிகள் முனைவர் புனிதவதி, முனைவர் ஈஸ்வரன், முனைவர் சகிலா, முனைவர் மாரிமுத்து, முனைவர் ஜானகி, முனைவர் ஷீபா ஜாஸ்மின், பண்ணை மேலாளர் ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் என நிலைய இணை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.



# அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# தேசிய பசுமைப்படை மாணவர்களுக்கு வனம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்க முகாம் நடந்தது



தூத்துக்குடி, ஜன.13

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றங்கள் துறை, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கல்வி மாவட்ட தேசிய பசுமை படை சார்பில் தேசிய பசுமைப்படை மாணவர்களுக்கு களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனக்கோட்டம், முண்டந்துறை வனச் சரகத்தில், கோவில்பட்டி கல்வி மாவட்டத்தை சேர்ந்த சுமார் 10 பள்ளிகளில் பயிலும் 50 தேசிய பசுமைப் படை மாணவர்களுக்கு வனம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்க முகாம், மூன்று நாட்கள் (10ம் தேதி முதல் 12ம் தேதி வரை) நடந்தது. இப்பயிற்சியின் முதல் நாள் (10.1.25) முண்டந் துறை வனச்சரக கூட்ட அரங்கில் வைத்து வனச்சரகர் கல்யாணி தலைமையில், வன காப்பாளர் அசோக்குமார், கோவில்பட்டி தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலகணேசன் முன்னிலையில் தொடங்கியது. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் பற்றியும், வனம் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு பற்றியும், மரம் வளர்ப்பதன் அவசியம் மற்றும் வன உயிர்களின் பண்முக வளர்ச்சி, பயன்கள் பற்றி எடுத்து விளக்கப்பட்டது. மாணவர்கள் உறுதிமொழி ஏற்றனர். பின்பு சேர்வலார் டேம் பகுதிக்கு அழைத்துச் சென்று கள ஆய்வு நடத்தப்பட்டது.

இரண்டாம் நாள் (11.1.25) முண்டந்துறை முதல் மூலகசம் வரை மலையேற்ற நடைப்பயிற்சியும், பாபநாசம் அணைப்பகுதி உட்பட வனக்காப்பாளர் அசோக்குமார் தலைமையில் இயற்கையுடன் விழிப்புணர்வு பயிற்சி அளித்தார். தொடர்ந்து அம்பாசமுத்திரம் புலிகள் திட்ட துணை இயக்குநர் வன உயிரினக்காப்பாளர் இளையராஜா முகாமை பார்வையிட்டு களக்காடு காப்பகத்தினைப் பற்றியும், வனத்தின் அவசியம் பற்றியும் வனத்தினைப் பாதுகாப்பது பற்றிய வழிமுறைகளைப் பற்றியும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து மாணவர்களின் கேள்வி–பதில், கலந்துரையாடல் மேற்கொண்டு வாழ்த்தி பேசினார். அதனைத் தொடந்து சூழலியலாளர் ஸ்ரீதர் கலந்து கொண்டு குரங்குகள், அணிகள், பட்டாம்பூச்சிகள் மற்றும் புலிகள் பற்றியும் அதன் அவசியத்தினைப் பற்றியும் விளக்கு பயிற்சி அளித்தார். பின்பு மாணவர்களை பாபநாசம், அகஸ்தியர் அருவிக்கு அழைத்துச் சென்று பார்வையிட்டு அழைத்து வரப்பட்டனர்.

மூன்றாம் நாள் (12.1.25) பறவைகள் மற்றும் பிற இன பூச்சிகளின் வகைளைப் பற்றியும், அதன் வேறுபாடு, அகஸ்தியர் நகர் பழங் குடியின மக்களின் வாழ்வாதாரம் பற்றியும் எடுதுரைக்கப்பட்டது. பின்பு சொரிமுத்து அய்யனார் கோவிலை பார்வையிட்டனர். களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனக்கோட்ட வனப்பணியாளர்களுடன் சமத்துவ பொங்கல் விழாவில் தேசிய பசுமைப் படை மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்று வாழ்த்து பெற்றனர். தொடர்ந்து மூன்று நாட்கள் பயிற்சியில் கலந்து கொண்ட




ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு துணை இயக்குநர் மற்றும் வன உயரினக்காப்பாளர், புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் இளையராஜா, தலைமையில் நினைவுப்பரிசும், மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

கருப்பூர் அரசு உயர்நிலை பள்ளி, இளம்புவனம் பள்ளி, ஊத்துப்பட்டி அ.மே.நி.பள்ளி, கழுகுமலை அரசு.மே.நி.பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி என 10 தேசிய பசுமைப் படை பள்ளிகளை சேர்ந்த 50 மாணவர்கள் மற்றும் 10 பள்ளி ஒருங்கிணைப்பாளர்கள் பிரபு, ஜெயகுமார், மாணிக்கராஜ் உட்பட பசுமை விருது பெற்ற கோவில்பட்டி பசுமை ஆர்வலர் சுரேஷ்குமார் மற்றும் சூழல் ஆர்வலர் இராமமூர்த்தி மற்றும் பிற ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் முண்டந்துறை வனச்சரக அலுவலர் மற்றும் வனப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். அனைத்து தேசிய பசுமைப்படை மாணவர்களுக்கும் அரசு முத்துரை பதித்த பனியன்கள், சில்வர் தண்ணீர் பாட்டில்கள், மஞ்சள் பைகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முகாம் ஏற்பாடுகளை கோவில்பட்டி தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலகணேசன் மற்றும் பசுமை பொறுப்பு ஆசிரியர்கள் செய்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயத் தொழிலுக்கு உதவிய அனைவரும் நன்றி தெரிவிக்கும் நாளே 'பொங்கல் தின விழா'



எந்தவித ஒரு செயலையும் நம்முடைய முன்னோர்கள் தை மாதத்தில் தான் பழங் காலம் தொட்டு தொடங்கு வார்கள். அதனாலே தான் என்னவோ 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்றனர். இந்த மாதம் தான் சூரியன் வட அரைக்கோள பகுதியில் பயணத்தை தொடங்கும் உத்திராண்ய காலம் ஆரம்பமாகும். ஆடி பட்டம் தேடி விதை என்பதற்கிணங்க ஆடியிலே விதைச்சு தை மாதத்தில் காப்பு கட்டி அறுவடை விவசாயிகள் தொடங்கு வார்கள். எனவே, இந்த மாதம் பாடுபட்டு உழைத்த உழவர்கள், தங்களுடைய வேளாண் பணி களுக்கு உதவிய சூரியன், மழை, காற்று, நிலம், கால்நடைகள், விவசாயத் தொழிலாளர் களுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே 'தைப் பொங்கல்' திருநாளாகும். பொங்கல் பண்டிகை தமிழர்களின் உயிரோடு உணர்வோடு கலந்த பண்டிகை என்பதால் இதற்கு தமிழர் திரு நாள் என்ற பெயரும் உள்ளது. உலகளாவிய தமிழர்கள் கொண்டாடும் ஒரே பண்டிகை இது தான். மற்ற பண்டிகை கொண்டாடினாலும் இந்த தைத்திருநாளை கொண்டாடுவது எல்லையற்ற மகிழ்ச்சியை தரும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

**பொங்கல் என்பதற்கு என்ன பொருள் தெரியுமா?**

பொங்கல் என்பது மங்களகரமான நிகழ்ச்சியின் தொடக்கமே. பொங்கல் என்பதற்கு 'பொங்கி வழிதல்' பொங்குதல் என்ற பொருள் படும்.

**பொங்கல் எப்படி வைக்கப்படுகிறது?**

புதிய மண்பானையில் புத்தரிசியிட்டு அரிசியிலிருந்து வரும் பால் பொங்கல் பொங்கி வழிந்து வருவதால், தை பிறந்துள்ள இந்த நாளில் நம்முடைய வாழ்வும், வளமும், அந்த பொங்கிய

பால் போன்று பொங்கி சிறக்கும் என்பதை நம்முடைய விவசாயிகள் காலமாக காலமாக நம்பிக்கையுடன் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். மகிழ்ச்சியும், திளைப்பும் ஒரு சேரப் பல்கிப் பெருவதோடு கழனியெல்லாம் பெருகி அறுவடை மேன்மேலும் அதிகரிக்கும் என்பதே இந்த பொங்கல் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமே. அதுமட்டுமல்ல தொன்று தொட்டு வரும் நம்பிக்கையாகும்.

பொங்கல் தினத்தன்று காப்பு கட்டி (மாவிலை, வேப்பிலை, கம்பு, கதிர் கண்ணுபிளை செழி) அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிரில் சில நெற்கதிரிகளை அறுவடை செய்து சிறிதளவு கொண்டு வந்து அரிசியாக்கி வீட்டு முன் பொங்கலிட்டு கரும்பு மஞ்சக்குலையுடன் படைத்து இயற்கையை வணங்குவது வாடிக்கையாகும்.




அத்துடன் காடுகளில் விளையக்கூடிய கிழங்கு வகைகள், காய்கறிகள் படையலிட்டு வணங்குவார்கள். புதுமணத் தம்பதியருக்கு பொங்கல் சீர் கொடுத்து மகிழ்வார்கள்.

மறுநாள் கால்நடைகளுக்கு மாட்டு பொங்கல் வைத்து கால்நடைகளை உற்சாகப்படுத்துவதுடன் ஜல்லிக்கட்டு (ஏறு தழுவுதல்) போட்டி நடைபெறும். விவசாயிகளுக்கு பாடுபட்டு உழைத்த நாட்களுக்கு வெகுமதி (வருமானம்) தரக்கூடிய நாளாக தைத் திருநாள் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொங்கலோ பொங்கல் எங்கும் பொங்கட்டும் மகிழ்ச்சி என வாழ்த்துவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைக் கவசம் உயிர்க் கவசம்

# நெல் வயல் சூழல் ஆய்வு விவசாயிகளுக்கு பயிற்சி

விருதுநகர், ஜன.13

பூச்சிகளும் அழகான உயிரினங்களே! பூச்சியினங்கள் அறிவோம்! இயற்கை சார்ந்த விவசாயத்தினை பேணி காப்போம்!!



பூச்சிக்கொல்லி மருந்துகளை குறைவாக பயன்படுத்தி நஞ்சில்லாத உணவினை உற்பத்தி செய்திடுவோம்.

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், வட்டாரத்தில் உள்ள சேத்தூர் தெற்கு தேவதானம் கிராமத்தில் நெல் வயல் சூழல் ஆய்வு குறித்த பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் திருமலைச்சாமி தலைமையில் வேளாண்மை அலுவலர் மாரியப்பன் பயிற்சியை துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அரசு திட்டப்பணிகள் குறித்தும் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை வேளாண்மை பொருட்கள் மானிய விலையில் பெற்றிடவும் விவசாயிகளுக்கு ராமன் வரவேற்புரை வழங்கினார். உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா அரிபுத்திரன், நெல் வயல் சூழல் ஆய்வு, நன்மை செய்யும் பூச்சிகள் தீமைசெய்யும் பூச்சிகள் இனங்கள் கண்டறிதல், பூச்சிகளின் செயல்பாடுகள், பயிரைத் தாக்கும் நோய்கள் அறிகுறிகள், இயற்கை வழிமுறை பயிர் பாதுகாப்பு, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பயன்பாடு ,முக்கியத்துவம், வருமுன் காக்கும் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளித்தார்.

உருவத்தில் சிறியதாகத் தெரியும் பூச்சிகளின் உலகம் மிகவும் பிரமாண்டமானது. பூச்சிகளும் மிகவும் அழகான உயிரினங் களே. ஒவ்வொரு பூச்சியிலும் ஒரு தனித்தன்மை திறன் இருக்கிறது.

அவைகளிலும் பிரமிக்கதக்க வகையில் பல்வேறு வடிவங்கள் உருவ அமைப்புகள் வண்ணங்களில் அழகாக இப்பூமியில் பரிணமித்துள்ளன.

இயற்கை அழகினை இரசிக்கும் நாம் இயற்கையோடு சார்ந்து வாழும் அனைத்து உயினங்களையும் பூச்சியினங்களையும் உற்று நோக்க வேண்டும். பூச்சிகள் என்றாலே நம்மில் பலருக்கும் பிடிக்காது. அது ஓர் அருவருக்கத்தக்க ஜீவன் என்றே எண்ணுகிறோம். ஆனால் அது தவறானது. தீமை செய்யும் பூச்சிகளை மட்டும் பார்த்துப் பழகிய நமது கண்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் தெரிவதே இல்லை. பூச்சியனங்களை உற்று நோக்கும் போது மிகவும் பிரமிப்பாகவும் அவற்றின் செயல் பாடுகளை கண்டு ரசிக்கும் போது இயற்கையின் படைப்பில் அனைத்தும் அதிசயங்களே என்ற ஓர் உள்ளுணர்வு அனைவரின் மனதிலும் ஏற்படும். இப்பூமியில் பரிணமித்துள்ள உயிரினங்கள் அனைத்தும் உயிர்ச் சங்கிலியின் பிணைப் பாகவே உள்ளது என்பதை அனைவரும் அறிய வேண்டும்.




பூச்சிகளையும் புழுக்களையும் அருவருப்புடன் பார்க்கும் சிந்தனை போக்கு அனைவரின் மனதிலும் படிந்துள்ளது. இந்த எண்ணம் மாற வேண்டும். பூச்சிகளை அறிவியல் பார்வையுடன் காணும்போது அதன் சூழல் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பூச்சிகள் இயற்கைக்கு செய்ய வேண்டிய பங்களிப்பை சரியாகவே செலுத்துகின்றன. மனிதர்களுக்கும் பூச்சிகளுக்கும் இடையேயான சார்பு வாழ்க்கை குறித்த விழிப்புணர்வு அனைவரின் மத்தியிலும் ஏற்பட வேண்டும். அதிகமான பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாட்டினால் பூச்சி யினங்கள் பிற உயிரினங்கள் அழிவதை தடுக்க வேண்டும். இயற்கையோடு இயைந்த சாகுபடி முறைகளை கடைப்பிடித்து அதிக விளைச்சல் பெற வேண்டும். இதற்காக வயல் சூழல் ஆய்வு நடைமுறை தொடர்ந்து கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு பண்ணைப்பள்ளி வயல்வெளிப்பள்ளி பயிற்சி வகுப்புகள், ஏஇஎஸ்ஏ தொழில்நுட்பம் செயல் விளக்கங்கள், கருத்தரங்கு கண்காட்சிகள் ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதில் அனைத்து விவசாயிகளும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என எடுத்துக்கூறினார்.

விவசாயிகளுக்கு நேரடி நெல் வயல் ஆய்வு மூலம் பூச்சி இனங்கள் நோய் தாக்கங்கள் அறிகுறிகள் விளக்க படங் களுடன் பயிற்சி வழங்கப்பட்டது. விவசாயிகள் ஐந்து குழுக்களாக பிரிந்து வயல் சுற்றுச்சூழல் ஆய்வு செய்து வயலில் காணப்பட்ட நன்மை செய்யும் பூச்சி இனங்களையும் தீமை செய்யும் பூச்சிகளையும் , நோய் தாக்கப்பட்ட செடிகள் களையும் சேகரித்தனர்.

சேகரிக்கப்பட்ட மாதிரிகள் விவசாயிகளுக்கு கண்காட்சி செய்யப்பட்டு விளக்க படங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகள் அலுவலர்களுடன் கலந்துரையாடல் செய்தனர். பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. பூச்சி மேலாண்மையில் தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின் பொதுவான எண்ணிக்கை விகிதம் 2:1 கடைப்பிடிக்கப்படுகிறது.




தீமை செய்யும் பூச்சிகள் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை விகிதம் 2:1 என்ற அளவில் இருந்தால் மருந்து தெளிக்கும் முறைகள் தேவை இல்லை. விகிதம் 2:1 விட குறைவாக இருந்தால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார். பறவைதாங்கி குச்சிகள், ஒட்டுண்ணி அட்டைகள், இனக்கவர்ச்சி பொறிகள், விளக்குப் பொறிகள், மஞ்சள் நிற ஒட்டு பொறிகள், வரப்பு பயிர் முறைகளை கடைபிடித்து நன்மை தீமை செய்யும்பூச்சிகள் கண்காணிப்பு செய்து நல்ல விளைச்சல் பெற்றிடலாம் என்று கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் முருகன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான், பத்மாவதி, ஆகியோர் செய்திருந்தனர். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் வனஜா பயிற்சிக்கு வருகை புரிந்த விவசாயிகளுக்கு தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கி நன்றியுரை கூறினார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உழவர் வயல் வெளி பள்ளி நடைபெற்றது



திருச்சி, ஜன.13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டாரம் திருமண மேடு கிராமத்தில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் உழவர் வயல் வெளி பள்ளி நடைபெற்றது.

நெல் பயிரில் சான்று பெற்ற விதைத்தேர்வு, உயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்தல் , இலை சுருட்டுப்புழுக்களை உயிரியல் முறையில் கட்டுபடுத்த டிரைக்கோகிரமா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணி 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை வெளியிட வேண்டும். ஒரு சிசி யின் விலை ரூ.30/-. இவை குளவி இனத்தைச் சேர்ந்த உயிரியில் கராணி அட்டைகளை கட்டிவிட்டு கட்டுப்படுத்தலாம் என லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சி.சத்தியப்பிரியா அறிவுரை வழங்கினார்.

பண்ணைபள்ளியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் நெல் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் அடங்கிய வண்ண புத்தக கையேடு வழங்கினார். மேலும் வேளாண்மைத் துறையில் திரவ உயிர் உரங்கள் 50 சதவீதம் மானிய விலையில் பெற்று பயன்படுத்துதல், வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும்மானிய திட்டங்கள், விவசாயிகள் கவுரவ நிதி திட்டம், தமிழ் மண்வளம் செயலி பயன்படுத்துதல், மண் மாதிரி சேகரிப்பு அவசியம் மற்றும் மண் மாதிரி அடிப்படையில் உர நிர்வாகம் அளித்தல், மண் வள அட்டை பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறினர். அய்யாசாமி, துணை வேளாண்மை அலுவலர் பேசுகையில் நெற்பயிரில் திரவ வடிவ உயிர் உரங்கள் பயன்படுத்துதல், நுண்ணூட்டம் பயன்படுத்துதல், மன்மாதிரியின் அடிப்படையில் உரம் மேலாண்மை செய்தல் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார். வாளாடி தலைமையிட உதவி வேளாண்மை அலுவலர் ராஜசேகரன், வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

மானிய திட்டங்கள், நெல்லுக்கு பின் உளுந்து, வரப்பு பயிரில் உளுந்து விதைத்தல், ஜிப்சம், ஜிங் சல்பேட், நெல் நுண்ணூட்டம் பயன்படுத்துதல் மானிய திட்ட விபரங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட உதவிதொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், அட்மா திட்ட செயல்பாடுகள், கண்டுணர்வு சுற்றுலா, விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கத் திட்டங்கள், விவசாயிகள் கௌரவ நிதி பெற தனது சுய விவரங்களை பதிவு செய்வது பற்றி விளக்கி கூறினார். மேலும் அனைத்து விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இப்பண்ணை பள்ளியில் திருமண மேடு கிராமத்தை சேர்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# எஸ்ஆர்எம் கல்லூரி மாணவர்கள் சார்பில் உழவர்களுக்கு பயிற்சி



செங்கல்பட்டு, ஜன.13

செங்கல்பட்டு மாவட்டம், வெடால் ஊராட்சியில் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் தங்கி இருக்கும் எஸ்ஆர்எம்வேளாண் அறிவியல் கல்லூரியில் பயிலும் ரோஜர்ஸ் குழுவை சேர்ந்த 11 மாணவர்கள் இந்த பயிற்சியை ஏற்பாடு செய்தனர். பேராசிரியர் கணேசமூர்த்தி சாண எரிவாயு உற்பத்தி பற்றியும் பேராசிரியர் ராகேஷ்வரி காளான் வளர்ப்பு பற்றியும் மற்றும் பேராசிரியர் தினேஷ் மண்புழு உரம் தயாரிப்பு பற்றியும் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி ஆற்றினார்கள். சாண எரிவாயு உற்பத்தி மூலம் எரிவாயு பயன்பாட்டை அறிந்து, சுற்றுச்சூழலை பாதுகாத்ததுடன், அதன் கழிவுகளை உரமாகப் பயன்படுத்தினர். காளான் வளர்ப்பு பயிற்சி, குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்ட ஒரு புதிய தொழில்முறையை உருவாக்கி, உள்ளூர் சந்தைகளில் வளர்ச்சியை ஏற்படுத்த ஊர் பொதுமக்களை ஊக்குவித்தது. மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, மண்ணின் தரத்தையும் பயிர்களின் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது. இவ்வாறு, இந்த பயிற்சிகள் கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும் சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையை பாதுகாக்கவும் உதவின. இதில் மக்கள் நலப்பணியாளர் முத்தமிழ் பாக்கியநாதன் விவசாயிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# சோளம் பயிரில் ஏற்படும் நோய்கள் மேலாண்மை முறைகள்

**அடிச்சாம்பல் நோய்**

இந்நோய் 50 முதல் 70 சதவிகிதம் வரை மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.

**அறிகுறிகள்**

இலைகளின் அடிப்பாகத்தில் வெண்மையான பூஞ்சாண வளர்ச்சி தோன்றுதல், இலைகள் வெளுத்துக் காய்ந்து விடுதல், இலைகள் நரம்புகளின் ஊடே கிழிந்து நார் போல் தோன்றுதல்.

**நோய் நிர்வாகம்**

இந்நோயினால் பாதிக்கப்பட்ட பயிரை உடனே அகற்றுதல் வேண்டும். பயறுவகைப் பயிர் அல்லது எண்ணெய் வித்துப் பயிரை சுழற்சி முறையில் பயிரிடலாம். ஒரு கிலோ விதைக்கு மெட்டாலக்சில் 6 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்து மெட்டாலக்சில் ஒரு எக்டருக்கு 500 கிராம் அல்லது மேன்கோசெப் 1 கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும்

**தேன் ஒழுகல் நோய் அறிகுறிகள்**

இந்நோய் பூஞ்சாணத்தால் உண்டாகிறது. கதிரில் முத்து போன்ற தேன் துளிகள் காணப்படும்.

பூஞ்சாணத் துளிகள் தேன் போன்று இனிப்பாக மணமுள்ளதாக இருக்கும். பூக்கள் தானியமாக மாறாமல், இறுகி கடினமான கருமை நிறத்தில் கூம்பு வடிவ இலை முடிச்சாக மாறிவிடும். அதை சுற்றி ஈ, தேனீ மற்றும் இதர பூச்சிகள் அதிகம் காணப்படும்.

**நோய் நிர்வாகம்**

விதைப்பு பருவத்தை மாற்றுதல் மூலம் கட்டுப்படுத்தலாம். ஒரு எக்டருக்கு மேன்கோசெப் 1 கிலோ (அ) புரோபிகொனசோல் 500 மி.லி. 3 முறை (ஒரு வார இடைவெளியில்) தெளித்து கட்டு படுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நான்காவது ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் விழிப்புணர்வு



திருச்சி, ஜன.13

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுபவர்கள், இயற்கை இடுபொருட்களை தயாரிப்பவர்கள் மற்றும் சந்தைப் படுத்துபவர்களை ஒருங்கிணைத்து இயற்கை வேளாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டு வருகிறது.

ஜனவரி மாத கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற தலைப்புகளின் கீழ் தொழில்நுட்ப வல்லுநர்களால் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இக்கருத்தரங்கில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுபவர்கள், இயற்கை இடுபொருட்களை தயாரிப்பவர்கள் மேலும் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை சந்தைபடுத்தினர். வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி .ராஜாபாபு இந்த நிகழ்ச்சியின் நோக்கம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். ஓய்வு பெற்ற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் பேராசிரியர் முனைவர் கவிமணி ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விழிப்புணர்வு வழங்கினார்.

இயற்கை வேளாண்மையில் மானாவாரி சாகுபடி மற்றும் சிறுதானியங்களின் பங்கு குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் மாரிமுத்து விளக்கினார்.

பயிர் சாகுபடி, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு போன்ற ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அங்கங்கள் குறித்து கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் அண்ணாதுரை தெளிவாக விளக்கினார்.

கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்முனைவர் மாசிலாமணி இயற்கை விவசாயத்தில் சந்தைபடுத்துதல் மற்றும் அங்கக சான்றிதழ் வாங்குதல் பற்றி விளக்கினார். வேளாண் அறிவியல் நிலைய மண்ணியல் தொழில்நுட்ப வல்லுனர் முனைவர் ஜானகி




மண்புழு உரம் தயாரித்தல் பற்றியும் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுனர் முனைவர் ஷீபா ஜாஸ்மின் காளான் வளர்ப்பு பற்றியும் விளக்கினார். இறுதியாக விவசாயிகள், விஞ்சானி களிடைய கருத்து பரிமாற்றம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானிகள் முனைவர் புனிதவதி, முனைவர் ஈஸ்வரன், முனைவர் சகிலா, முனைவர் மாரிமுத்து, முனைவர் ஜானகி, முனைவர் ஷீபா ஜாஸ்மின், பண்ணை மேலாளர் ராதாகிருஷ்ணன் முன்னோடி விவசாயிகள், கலந்து கொண்டனர்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**